Previous Date of examination :

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**திருவாரூர்**

# STC No.1049/2019

**2024-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ம்** நாள் புகார்தாரர் தரப்பில் சாட்சி **பு.சா. 1**-ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாந்தகுமார் | வயது | 61/2024 |
| தகப்பனார் பெயர் | தங்கவேல் | ஜாதி | |
| தொழில் | பைனான்ஸ் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் | மதம் | |
| ஊர் | திருவாரூர் | தாலுக்கா | |

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

(1) நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால்? பைனான்ஸ் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். நான் எத்தனை வருடமாக பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன் என்றால் ? 2017 ம் ஆண்டிலிருந்து செய்து வருகிறேன். பைனான்ஸ் தொழில் செய்வதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால்? தாக்கல் செய்யவில்லை, தேவைப்பட்டால் தாக்கல் செய்யமுடியும். பைனான்ஸ் நிறுவனத்திற்கான கணக்கு வழக்குகளை பராமரித்து வருகிறேனா என்று கேட்டால்? இல்லை. எதிரிக்கு கடன் கொடுத்த விபரத்தை வருமானவரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால்? மொத்தமாக காட்டியுள்ளேன். வருமானவரி கணக்கு ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

(2) ஆஜர் எதிரிக்கு எவ்வளவு பணம் கடன் கொடுத்தீர்கள் என்று கேட்டால்? ரூ.4,50,000/- கடன் கொடுத்துள்ளேன். எதிரிக்கு கையிருப்பிலிருந்து கடன் கொடுத்தேனா? அல்லது வங்கியிலிருந்து எடுத்து எதிரிக்கு கடன் கொடுத்தேனா என்று கேட்டால்? தொழில் செய்வதற்காக வங்கியிலிருந்து கடன்

வாங்கி வைத்திருந்ததிலிருந்து எதிரி ரொக்கமாக கடன் கொடுத்தேன். எனது வங்கி கணக்கிலிருந்து மற்ற வங்கி கணக்கிற்கு பணம் பரிமாற்றம் செய்யும் வசதி உள்ளதா என்று கேட்டால்? உள்ளது.

(3) எதிரிக்கு கடன் கொடுத்ததற்கு முன்போ அல்லது பின்போ மற்றும் வங்கியில் கடன் பெற்று தொழில் செய்து வருவதற்கான வங்கி பரிவர்த்தனை பதிவுகளை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால்? சரிதான். பு.சா.ஆ.4 ஆவணமான அஞ்சல ஒப்புகை அட்டையில் எதிரி கையொப்பம் இட்டு பெறவில்லை என்று சொன்னால் ? சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு சார்வு ஆகவில்லை என்றாலும், அஞ்சல் துறையை சரிசெய்து எதிரிக்கு சார்வு ஆகியுள்ளது போல பு.சா.ஆ.4 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால்? சரியல்ல.

(4) என் மீது திருவாரூர் நகர காவல் நிலையத்தில் கந்துவட்டி புகார் உள்ளது என்று சொன்னால்? புகார் பதிவு செய்யப்பட்டது உண்மைதான். ஆனால் நான் அந்த வழக்கிலிருந்து விடுதலை செய்துவிட்டேன். நான் இந்த நீதிமன்றத்திற்கு அடிக்கடி வந்து செல்பவர் என்றால்? சரியல்ல. வழக்கு விசாரணை தேதிகளுக்கு மட்டும் வந்து செல்வேன். இந்நீதிமன்றத்தில் 30 க்கும் மேற்பட்ட காசோலை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால்? ஞாபகம் இல்லை. ஆஜர் எதிரியை எத்தனை வருடமாக தெரியும் என்று முதல் விசாரணையிலோ, புகாரிலோ சொல்லவில்லை என்று சொன்னால் ? சரிதான்.

(5) எதிரியின் மனைவியின் பெயர் மற்றும் அவர் என்ன வேலை செய்கிறார் என்று தெரியுமா என்றால்? தெரியாது. ஆஜர் எதிரியை தெரியாது என்பதால்தான் மேற்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிக்க முடியவில்லை என்று சொன்னால்? சரியல்ல. வழக்கிற்காக எதிரியை தெரியும் என்று சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால்? சரியல்ல. எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லும் நான் எங்கு வைத்து கடன் கொடுத்தேன் என்று கேட்டால் ? எனது அலுவலகத்தில் வைத்து கடன் கொடுத்தேன். கடன் கொடுக்கும்போது யாரும் உடன் இருந்தார்களா என்று கேட்டால்? வேறு யாரும் உடன் இல்லை.

(6) எதிரி என்னிடம் எந்த தேதியில் பணம் கேட்டு எந்த தேதியில் கடன் தொகையை கொடுத்தேன் என்றால்? 19.04.2018 ம் தேதியன்று கடன் கொடுத்தேன். எதிரிக்கு விபத்து ஏற்பட்டதால் மருத்துவ சிகிச்சைக்காக கடன்

கேட்டதால் கடன் கொடுத்தேன். நான் சொல்வது போல் அந்த சமயத்தில் எதிரிக்கு விபத்து ஏற்படவில்லை என்று சொன்னால் ? சரியல்ல. கை கடிதத்தை பெற்றுக்கொண்டு காசோலையை எந்த தேதியில் பெற்றுக்கொண்டேன் என்றால்? 12.04.2019 ம் தேதியாகும். *சாட்சி தற்போது காசோலை தேதிதான் 12.04.2019 ம் என்று சாட்சியமளிக்கிறார்.* முதல் விசாரணையில் 04.04.2019 ம் தேதியன்று கை கடிதத்தை பெற்றுக்கொண்டு எதிரி காசோலை கொடுத்ததாக கூறிவிட்டு தற்போது மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் ? சரியல்ல.

(7) கை கடிதத்தை பெற்றுக்கொண்டு காசோலை யை எதிரியிடமிருந்து பெற்றுக்கொள்ளும்போது யார், யார் உடன் இருந்தார்கள் என்றால்? வேறு யாரும் உடன் இருக்கவில்லை. எதிரிக்கு விபத்து நடந்த விபரம் தெரியுமா என்றால்? எதிரி சொன்னதன் மூலம் தெரியும். பணம் வாங்கும்போது சொன்னார். எதிரிக்கு ஏற்பட்ட விபத்தின் விபரத்தை கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால்? விபத்தின் விபரம் பற்றி எதிரி என்னிடம் சொல்லவில்லை. 18.06.2018 ம் தேதி எதிரிக்கு விபத்து நடந்து தொடையிலும், இரண்டு கால்களிலும் அறுவை சிகிச்சை செய்து இரண்டு கால்களிலும் பிளேட் வைத்து அதனால் அவரால் ஒரு வருடத்திற்கு மேல் தனியாக யாருடைய உதவியும் இல்லாமல் எங்கும் செல்லமுடியாது என்றாலும், நான் சொல்லியுள்ளது போல் 04.04.2019 ம் தேதியில் எதிரி தனியாக வந்து கை கடிதத்தை பெற்றுக்கொண்டு காசோலையை கொடுக்க வாய்ப்பில்லை என்றால் ? சரியல்ல. எதிரி ஆட்டோவில் வந்து ஊன்றுகோல் உதவியுடன் எனது அலுவலகம் வந்தார். வழக்கிற்காக ஆட்டோவில் வந்ததாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால்? சரியல்ல.

(8) இந்த வழக்கில் எதிரி கொடுத்த கைகடிதத்தின் நகல் தாக்கல் செய்துள்ளேனா என்றால்? எதிரி அசல் கை கடிதத்தை வாங்கிக்கொண்டுதான் காசோலை வழங்கினார். நான் சொன்னதுபோல் அப்படியொரு சம்பவம் எதுவும் நடக்கவில்லை, சம்பவம் எதுவும் நடந்திருந்தால் கை கடிதத்தின் நகலையாவது தாக்கல் செய்திருப்பேன் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால்? சரியல்ல.

(9) அலிவலம் ரேணுகா என்பவரை தெரியுமா என்றால்? தெரியும். கோமதி என்பவரை தெரியுமா என்றால்? தெரியாது. கோமதி என்பவர் ஆஜர் எதிரியின் அம்மா என்பது தெரியுமா என்றால்? தெரியாது. சிந்தனைசெல்வி

என்பவரை தெரியுமா என்றால்? தெரியும். சிந்தனை செல்வி என்பவர்தான் ஆஜர் எதிரியின் அம்மாவை சுயஉதவி குழுவில் சேர்த்து விட்டார் என்பது தெரியுமா என்றால்? தெரியாது. ரேணுகா என்பவர்தான் மல்லிகா, உஷா, வாசுகி, நிர்மலா, சாந்தநாயகி, அமுதா, எதிரியின் அம்மா கோமதி ஆகியோர்களை கொண்டு மகளிர் சுயஉதவி குழு நடத்தி வந்த விபரம் தெரியுமா என்றால்? ரேணுகாவை தெரியும், மற்றவர்களை தெரியாது. ரேணுகா என்பவர்தான் தாவா காசோலையை என்னிடம் கொடுத்தார் என்று சொன்னால் ? சரியல்ல. எதிரியின் அம்மா சுயஉதவி குழுவின் மூலம் பெற்ற கடனுக்கு பிணையமாக கொடுக்கப்பட்ட எதிரியின் காசோலையை பயன்படுத்தி எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால்? சரியல்ல.

(10) நான் சொல்வது போல் எதிரி 19.04.2018 ம் தேதி எந்த கடனும் பெறவில்லை என்றும், எந்த கை கடிதமும் எழுதி கொடுக்கவில்லை என்று சொன்னால் ?சரியல்ல. 04.04.2019 ம் தேதி எந்தவித கை கடிதமும் பெற்றுக்கொண்டு, காசோலையை கொடுக்கவில்லை என்று சொன்னால் ? சரியல்ல. எதிரியின் காசோலையை நானாகவே பூர்த்தி செய்து கையொப்பம் இட்டு, பொய்யான சங்கதிகளை சொல்லி, எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால்? சரியல்ல. வழக்கு காசோலையானது சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்ட காசோலை இல்லை என்று சொன்னால்? சரியல்ல.

(11) நான் தாக்கல் செய்துள்ள எல்லா காசோலை வழக்குகளிலும் ரொக்கமாக பணம் கொடுத்ததாகதான் சொல்லியுள்ளேன் என்றால் ? ஞாபகம் இல்லை. நான் மேற்படி எந்த வழக்கிலும் கை கடிதத்தின் அசலையோ, நகலையே தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால்? ஞாபகம் இல்லை. இந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால்? சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஏற்கப்பட்டது.

ஓம்/- பி.மகேந்திரவர்மா,
நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.